இமாம் ஷாஃபி (ரஹ்) மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி

# செய்திமலர்

மாணவர்களால் மாதந்தோறும் மலரும் மலர்

ஜூலை 2022

## மாதாந்திர ஹதீஸ்

إِنَّ اللَّهَ رَفِيقٌ يُحِبُّ الرِّفقَ

**நிச்சயமாக அல்லாஹ் மென்மையானவன் மென்மையை விரும்புகிறான்.**

- மென்மையான அணுகுமுறை மிக நல்ல பழக்கம்.
- நண்பர்களோடும், நம்மை சந்திப்பவர்களோடும், மென்மையை அனுசரிக்கவும்.
- வன்மை மனம் கொண்டவர்களை அல்லாஹ் விரும்புவது கிடையாது.




## கல்வி(கவிதை)

நீதி தரும் கல்வியே தேவை!
புத்தகச்சுமை தேவை இல்லை!
சிந்திக்கும் திறன்மிகு கல்வி தேவை!
குருட்டு மனப்பாடக்கல்வி தேவை இல்லை!

செயலுடன் கூடிய கல்வியே தேவை!
செருக்குடன் கூடிய கல்வி தேவை இல்லை!
பணிவுடனே நடக்க வேண்டும்!
பல தலைமுறைகளும் சிறந்து விளங்க வேண்டும்!

பல திசைகளிலும் சென்று நற்பண்புடன்
அனைத்தையும் கற்று உயர்வோம் வாழ்விலே!
கல்வி என்பது பலமே!
கற்றல் என்பது சுகமே!

**நதீரா. மு VI STD**

## கல்வியும் கற்றல் முறைகளும்

கல்வி என்பது குழந்தைகளின் உடல் மற்றும் மன வளர்ச்சியில் மதிப்புடன் வளர்க்க உதவும் ஒரு சமூக அமைப்பு ஆகும். கல்வி என்பது ஒரு சமூக நிறுவனமாகும். கல்வி ஒரு மனிதனின் வாழ்க்கை முழுவதும் வருகிறது. குழந்தைப் பருவம் தொடங்கி முழுமையான பரிணாமம் அடைந்து, முழுமையான மனிதனாகவும், சமுதாயத்திற்கு தேவையான உதவிகளை அளிக்கும் படியும் மாணவர்களை மாற்றுகிறது. ஐம்புலன்களான மெய், வாய், கண், மூக்கு, செவி மூலமாக வெளியில் இருந்து செய்திகள் உட்கிரகிக்கப்படுகின்றன.



கடந்த 20 ஆண்டுகளாக கல்வி ஒருவருக்கு எவ்வாறு வழங்குவது என்பதில் பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. கீழ்க்கண்ட வழிமுறைகள் பெரிதும் வழக்கில் உள்ளன . அவையாவன :

* காட்சி வழிக்கல்வி
* செவி வழிக்கல்வி
* செயல் வழிக்கல்வி

இத்துடன் இசை வழிக்கல்வி,மாந்தர் வழிக்கல்வி சொல் வழிக் கல்வி மற்றும் தனக்குள் நிகழும் கல்வி ஆகியனவும் பயன்பாட்டில் உள்ளன.

**அ. முஹம்மது VIII Std**

# கல்வி வளர்ச்சி நாள் ஏன் கொண்டாடப்படுகிறது?




செயற்கரிய செய்வார் பெரியார் என்னும் வள்ளுவரின் வாய்மொழிக்கேற்ப செயற்கரிய செயல்களை செய்த செயல்வீரர் என்று புகழப்படுபவர் காமராசர். இவரை 'கல்விக்கண் திறந்த காமராசர்' என்றே அனைவரும் போற்றுகின்றனர். பாரதத்தின் விடுதலைக்காக மட்டுமல்லாமல் விடுதலை பெற்ற பாரதப் பெருநாட்டின் உயர்வுக்காகவும் அயராது பாடுபட்ட தலைவர்களில் ஒருவர் காமராசர். காமராசர் 1903 ஜூலை 15ஆம் நாள் விருதுநகரில் பிறந்தார். குடும்ப வறுமை காரணமாக பள்ளி படிப்பை பாதியிலேயே விட்டுவிட்டார்.நூல் நிலையங்கள் சென்று நூல்கள் பல படித்து தன் அறிவை வளர்த்துக் கொண்டார். கல்வியில் சிறந்த தமிழ்நாடு என்று புகழ்பெற்றதாக இருந்தாலும் தமிழக மக்கள் அனைவரும் கற்றவராக இல்லையே என்று காமராசர் வேதனைப்பட்டார். முதலமைச்சராக ஆன உடனேயே, தான் வறுமைநிலை காரணமாக படிக்காமல் இருந்ததை நினைத்து, ஏழை மாணவர்களுக்கு கல்வி கொடுப்பதையே தன் முழுமூச்சாக கருதினார். அதனால் ஊர்தோறும் பள்ளிகளைத் திறந்தார்

கல்வியின் அருமை பெருமைகளை அறிந்திருந்த காமராசர், இலவச கல்வியையும் மதிய உணவு திட்டத்தையும் கொண்டு வந்தார். இதனால் 1957-இல் 15,800 ஆக இருந்த தொடக்கப் பள்ளிகள் 1962 இல் 29 ஆயிரம் ஆக உயர்ந்தன. மாணவர் எண்ணிக்கை 19 லட்சத்திலிருந்து 40 லட்சமாக அதிகரித்தது. மாணவர்களுக்கு இடையே சமத்துவத்தைப் பேண அரசுப் பள்ளிகளில் இலவச சீருடை திட்டத்தைக் கொண்டு வந்தார். தனது விடாமுயற்சியால் கல்வியின் தரத்தை முன்னேற்றம் அடையச் செய்தார். இதைத் தவிர காமராசரின் ஆட்சிக் காலத்தில் தான் 'ஓராசிரியர் பள்ளிகள்' உருவாக்கப்பட்டன. பள்ளிக்கு வர முடியாத மாணவர்களுக்கு அவர்கள் இருக்கும் இடம் தேடி ஆசிரியரே சென்று கல்வி கற்பிக்கவே இந்த ஓராசிரியர் பள்ளிகள். அதேபோல் அரசுப் பள்ளிகளில் ஆங்கிலம் கற்பிக்கும் நடைமுறையையும் தொடங்கினார். இவ்வாறு கல்வி வளர்ச்சிக்கு அரும்பாடு பட்ட பெருமைக்குரிய தலைவரின் பிறந்த நாளையே கல்வி வளர்ச்சி நாளாகக் கொண்டாடி மகிழ்கிறோம்.

**மு. ஆயிஷா IX Std**

## உலகளாவிய கல்வி முறைகள் :




கல்வியினால் ஒரு நாட்டின் பொருளாதார நிலையில் மாற்றம் ஏற்படுகிறது. அதுபோலவே பொருளாதார நிலையும் கல்வியின் தரத்தை கட்டுப்படுத்துகின்றது. ஏழை நாடுகள் கல்வியின் மீது கவனம் செலுத்தினால் பொருளாதாரத்தில் விரைவில் மேம்பாடு அடையலாம். எவ்வாறெனில் முன்னேறிய நாடுகளில் கிடைக்கும் கல்வி அறிவு, தொழில்நுட்பங்கள் ஆகியவற்றை இறக்குமதி செய்து முன்னேற்றத்திற்கு பயன்படுத்திக் கொள்ளலாம். அமெரிக்க கல்வி முறையில், அடிப்படையிலேயே ஒரு முரண்பாடு உள்ளது என பவுலசு,சிண்டிசு ஆகிய பொருளாதார வல்லுநர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். அதாவது, அனைவருக்கும் சமமான கல்வி என்று ஒருபுறம் கூறிவிட்டு, மற்றொருபுறம் சமுதாயத்தில் ஏற்றத் தாழ்வுகளை உண்டாக்கும் முதலாளித்துவம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது எனக் கூறுகின்றனர் .

உலகம் மிக வேகமாக மாறி வருகின்றது. அதனால், நம் பழைய அறிவு புதிய காலத்திற்கு பயனற்றதாக போய்விடுகின்றது. பல்வேறு நாடுகள் பழைய கல்வி முறைகளை மாற்றி,புதுக்கல்வி கொள்கைகளை வகுத்துக் கொள்கின்றன.

பின்லாந்து போன்ற நாடுகளில் வழக்கமான பாடத்திட்டங்களில் இருந்து விலகி நடைமுறையில் காணும் நிகழ்வுகளை வைத்து குழந்தைகளுக்கான அறிவு புகட்டப்படுகின்றது. நம் அன்றாட வாழ்வுக்கு என்ன தேவையோ அதைக் கற்பிக்கிறார்கள். அரசுக்கு மனு எழுதுவது எப்படி? கடைகளுக்குச் சென்று பொருட்கள் வாங்குவது எப்படி? பருவநிலை மாற்றம் என்றால் என்ன? அது எப்படி நம் அடிப்படையிலிருந்து தொடங்குகிறது? இவை அனைத்தையும் நடைமுறை பயிற்சியில் தொடக்கப்பள்ளியிலேயே கற்பிக்கிறார்கள். குறிப்பாக வாழ்க்கை குறித்து அவநம்பிக்கையை விதைக்காமல், வாழ்தல் குறித்த நம்பிக்கையையும், சக மனிதர்கள் மீது பாசத்தையும் ஏற்படுத்துவதாக கல்வி உள்ளது.

**மு. அஃப்ரா VIII Std**



பூதக்குடி என்னும் கிராமத்தில் உள்ள அரசு பள்ளியொன்றில் சுந்தரமும், கந்தனும் படித்து வந்தனர். அப்பள்ளியில் நிறைய மாணவர்கள் படித்தாலும் சுந்தரமும் கந்தனும் மட்டும் நல்ல நண்பர்களாக இருந்தனர். சுந்தரம் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தவன். கல்விச் செலவுக்காகக் கூட அவன் தந்தை கடன் வாங்கித்தான் அவனைப் பள்ளியில் பயில வைத்தார். ஆனாலும் சுந்தரம் கல்வியில் மிகுந்த அக்கறையோடும் ஆர்வத்தோடும் இருந்து வகுப்பின் முதல் மாணவனாகவும் திகழ்ந்தான்.

கந்தன் மிகவும் வசதியான குடும்பத்தில் பிறந்தவன். ஆனால், படிப்பில் அக்கறையில்லாமல் இருந்தான். வீட்டுப் பாடங்களை ஒழுங்காகச் செய்ய மாட்டான். காலையில் நேரத்தோடு பள்ளிக்கு வர மாட்டான். ஆனால் மாலையில் முதல் மாணவனாக வீட்டுக்குத் திரும்பி விடுவான்.நாள்கள் பல சென்றன. கல்வியில் சிறிதும் ஆர்வமில்லாத கந்தன் பள்ளியை விட்டு விலகி விட்டான். அவன் பெற்றோர் எவ்வளவோ எடுத்துக் கூறியும் பள்ளிப் படிப்பைத் தொடர மறுத்து விட்டான்.

சுந்தரம் மிகவும் அக்கறையோடும் ஆர்வத்தோடும் தன் பாடங்களைப் படித்து வந்தான். வகுப்பில் படிப்பில் மட்டுமல்லாது பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி போன்றவற்றிலும் அதிக ஆர்வம் காட்டிப் பல பரிசுகளும் பெற்றான். ஆண்டுகள் பல கடந்தன. சுந்தரம் தன் பள்ளிப் படிப்பை முடித்து வெற்றி கண்டான். மாநிலத்திலேயே குறிப்பிடத்தக்க அளவு மதிப்பெண்கள் பெற்றிருந்த சுந்தரத்திற்கு அரசாங்கமே உதவித்தொகை தந்து மேற்படிப்புக்கு ஏற்பாடு செய்து கொடுத்தது. கந்தன் தன் பெற்றோர் வைத்திருந்த செல்வத்தைச் சிறுகச் சிறுகச் செலவு செய்தான். சிறிது காலத்தில் அவன் பெற்றோரும் இறந்து விட்டார்கள். ஆகவே, அவனது ஊதாரி நண்பர்களுடன் கூடி தீய பழக்கங்களுக்கு அடிமையாகிவிட்டான். அவனைக் கண்டித்துத் திருத்தப் பெற்றோரும் இல்லை. எனவே கந்தனின் செல்வம் நாளடைவில் குறையத் தொடங்கியது. மேல் படிப்புக்காக வெளியூர் சென்றிருந்த சுந்தரமோ மிகவும் நன்றாகப் படித்து நல்ல மதிப்பெண்களுடன் தேர்வில் வெற்றி பெற்றான்.சுந்தரத்தின் அறிவுக் கூர்மையைப் பாராட்டி அரசாங்கமே அவனுக்கு வேலை வாய்ப்பினைச் செய்து கொடுத்தது. சுறுசுறுப்பும், புத்திக் கூர்மையும் உள்ள இளைஞன் சுந்தரம் மேலும் மேலும் பதவி உயர்வு பெற்று வந்தான்.

பல ஆண்டுகளுக்குப் பிறகு, பூதக்குடி கிராமப் பள்ளி விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. மாவட்ட ஆட்சித் தலைவர் சிறப்பு விருந்தினராய்ப் பங்கு கொண்டார். பெருந்திரளாக மக்கள் கூட்டம் கூடி இருந்தது. மாவட்ட ஆட்சித் தலைவர் வருகையை ஒட்டி ஊர் அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. ஒலிபெருக்கி மூலம் அவரின் வருகையைப் பற்றி அடிக்கடி சொல்லிக் கொண்டே இருந்தனர்.சிறிது நேரத்தில் ஒரே பரபரப்பு. மாவட்ட ஆட்சித் தலைவர் வந்து கொண்டிருந்த காரின் இடையில் யாரோ ஒருவன் மது உண்ட மயக்கத்தால் விழுந்து லேசான விபத்து ஏற்பட்டுவிட்டது. அதைக் காண மக்கள் கூட்டம் கூடிவிட்டது. அங்கே கந்தன் மது மயக்கத்தில் இருந்தான். ஏழைக் குடும்பத்தில் பிறந்து ஆர்வமுடன் பயின்ற சுந்தரம் மாவட்ட ஆட்சித் தலைவராய் நின்று கொண்டிருந்தான்.உயர் பதவி வகித்த போதிலும் தன் பழைய நட்பை மறவாது, கந்தனுக்குத் தக்க உதவி செய்ய சுந்தரம் முன் வந்ததைக் கண்ட ஊர் மக்கள், அவனைப் போற்றிப் புகழ்ந்தனர்.

நீதி: பொருட்செல்வம் எவ்வளவு இருப்பினும், அது அழிந்துவிடும். கல்விச் செல்வம் அழியாது. ஆர்வமுடன் நாமும் பயின்றால் உயர் பதவிகளை அடையலாம்.

ஆயிஷா XI Std

## கல்வி - கவிதை


பள்ளியை நோக்கி ஓடினோம் அன்று
கணினியைத் தேடிச் செல்கிறோம் இன்று.
மலரும் மொட்டுகளுக்கு வழிகாட்ட வழியில்லை
மழலை பேச்சைக் கூட கேட்க முடியவில்லை
கனிவான கண்டிப்பும் அன்பான அதட்டலும்
தொலைந்துப் போனது இன்று !
திரை வழியாக கற்கிறோம்



திசை மாறிப் போகிறோம்
பாடத்தைக் கற்காமல் பாதைக் கிடைக்குமா?
இந்நிலை நீடித்தால் வெற்றி காண முடியுமா?
நேரில் பார்த்த ஆசிரியரின் முகம்
நீங்காத நினைவில் என் மனம்
இயந்திரத்தில் கற்று இயந்திரம் ஆனோம்
பள்ளிக்கு சென்றால் தான் “மாணவர்” ஆவோம்...!

ஆபியா VI Std

# நான் எதிர்பார்க்கக்கூடிய கற்றல் முறைகள்



எதிர்கால கனவோடு, வகுப்பறையில் நுழைந்து, விருப்பத்தோடு அமர்ந்து, புன்னகையுடன் தவழ்ந்து, புத்துணர்வு கலந்து, நான் விரும்பிய பள்ளி கிடைத்து விட்ட ஆனந்தத்துடன் நான் பள்ளியில் நுழையும் பொழுது,ஆசிரியர்கள் முகமலர்ச்சியோடு வரவேற்க வேண்டும்.

சக மாணவர்களுடன் வகுப்பறையில் அமர வேண்டும். என் கைவிரல் பிடித்து 'அ' என்ற எழுத்தை விரல் தொட்டு எழுத வேண்டும். பாடங்கள் திணிக்கப்படாமல் விருப்பத்தோடு கற்க ஏதுவாய் அமைய வேண்டும். ஏனெனில், பாடம் மதிப்பெண்களை பெறுவது மட்டுமல்ல; எட்டாத இடத்தையும் எட்டி பிடிக்கும் தூண்டுகோலாய் கல்வி அமைய வேண்டும்.


எதிர்கால வாழ்வை தீர்மானிக்கும் வகையில், பேசாத என்னை மேடைப் பேச்சாளராகவும், வரையாத என்னை வரையும் ஓவியனாகவும், எழுதாத என்னை எழுதும் எழுத்தாளனாகவும், ஆராயாத என்னை ஆராய்ச்சியாளனாகவும், பல கலைகள் தெரியாத என்னை பல கலைகளுக்கான விருதுகளைப் பெறவும் என்னை தயார்படுத்த வேண்டும். அன்பாகவும், பாசமாகவும், இனிப்புடன் கண்டித்து இனிமையாக பேசி, பல சிந்தனை நிறைந்த எண்ணங்களோடு அறிவை விரிவு செய்ய வேண்டும்.

**ஹஸ்னா & நசிஹா XII Std**

## மழலைகளின் கைவண்ணம்



I Std



I Std



II Std



IIIStd



IV Std



V Std